(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 பெப்ரவரி 07, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

8/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை மின்சார சபையில் பணிபுரியும் நிரந்தர, ஒப்பந்த மற்றும் அமய ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சம்பளம், படிகள் மற்றும் மிகை ஊதியமாக செலுத்தப்பட்டுள்ள தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக யாதென்பதையும் ;

(iii) மின்கம்பிகளை இழுத்தல், குழிகளைத் தோண்டுதல் மற்றும் மின் இணைப்பைத் துண்டித்தல் போன்ற பணிகள் ஒப்பந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) இலங்கை மின்சார சபையில் மிகை ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கத்தக்கதாக மற்றும் இவர்களுக்கு அதிக சம்பளம், படிகள் மற்றும் மிகையூதியம் செலுத்தப்படும் நிலையில், மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை ஒப்பந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் யாவையென்பதையும்;

(vi) அந்த நிலைமையை சரிசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

63/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகில் அநேகமான நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு இன்றளவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் அரச நிறுவனங்களில் இடம்பெறும் பல்வேறு ஊழல் மற்றும் மோசடிகளை தடுப்பதற்கு அந்த நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

73/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காக்காச்சிவட்டை, விளாந்தோட்டம், திக்கோடை-தும்பாளை மற்றும் மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் - தர்மபுரம் ஆகிய பிரதேசங்களில் குடிநீர் வசதிகள் இல்லையென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

83/2024

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை இன்றளவில் நடைமுறைப்படுத்தும் காப்புறுதி வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு காப்புறுதித் திட்டத்தாலும் காப்பீடு செய்யப்படும் பயிர் வகைகள் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பயிர்ச்சேதங்களுக்காக சபையால் செலுத்தப்பட்ட நட்டயீட்டுத் தொகை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அச்சபைக்கு நிதி கிடைக்கப் பெறும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

(iii) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையை மேலும் வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

123/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்விமாணி பட்டக் கற்கைநெறியை பயிலக் கூடிய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பட்டக் கற்கை நெறியை பயில்வதற்காக வருடாந்தம் இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அதிகளவான பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட பட்டக் கற்கை நெறியே காரணமாக அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அப்பட்டக் கற்கை நெறியை பயில்வதற்காக இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

151/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய மின் கட்டமைப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ள சூரிய மின்சக்திக் கொள்ளவு எவ்வளவு என்பதையும்;

(ii) சூரிய மின்சக்தி மூலம் இலங்கையின் தேசிய மின் கட்டமைப்பிற்கு வருடாந்தம் சேர்க்கப்படும் மின்சக்தி எவ்வளவு என்பதையும்;

(iii) “சூரிய பல சங்ராமய” கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) “சூரிய பல சங்ராமய” கருத்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Net+, Net Metering மற்றும் Net Accounting முறைமைகளின் கீழ் தேசிய மின் கட்டமைப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ள சூரிய மின்சக்திக் கொள்ளளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) சூரிய மின்சக்தியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

178/2024

கௌரவ ரவி கருணாநாயக்க, — நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சேமிப்பு வங்கி கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்;

(ii) அதன் தற்போதைய தலைவரினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களினதும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் பெயர்களையும்;

(iii) கிளைகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையினையும்;

(iv) இன்றுள்ளவாறாக பங்குகளுக்காக பெற்றுக்கொண்ட மூலதனம் யாதென்பதையும்;

(v) இது மூலதனப் போதியதன்மைக்கான பேஸல் (BASEL) தேவைப்பாடுகளுடன் இயைபுறுகின்றதா என்பதையும்;

(vi) இயைபுறாவிடின், அதை நிவர்த்திப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடங்களுக்கான இலாபம் மற்றும் அடுத்த 3 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் இலாபம் யாதென்பதையும்;

(ii) மேலே (i) இன் பிரகாரம், கடந்த 10 வருடங்களில் முதலீட்டின் மீதான இலாபம் என்ன என்பதையும்;

(iii) கடந்த 5 வருடங்களில் நிர்வாகச் செலவு மற்றும் கடன் வழங்கல் வரம்பு வீதம் எவை என்பதையும்;

(iv) கடன் வழங்கல் வீதத்தின் சதவீதமாக நிர்வாகச் செலவு என்ன என்பதையும்;

(v) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஐந்தொகைப் பெறுமதிகள் என்ன என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) (i) 1 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் என்ன என்பதைம்;

(iii) கடன் பதிவழிப்பதற்காக பின்பற்றப்பட்ட சட்ட நடவடிக்கைமுறைகள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

246/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்திலுள்ள கல்விக் கோட்டங்களில், கொழும்பு வடக்கு கல்விக் கோட்டத்தில் ஒரு தேசிய பாடசாலை இல்லாததை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், எதிர்காலத்தில் கொழும்பு வடக்கு கல்விக் கோட்டத்தில் தேசிய பாடசாலையொன்றைத் தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அதற்குப் பொருத்தமான பாடசாலையொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்குப் பொருத்தமான ஒரு பாடசாலை எதிர்காலத்தில் தெரிவு செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

256/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பென்தர, கயிகாவல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜனகலா கேந்திரய நிலையம் (கிராமிய கலைகள் நிலையம்) இன்றளவில் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஜனகலா கேந்திரய நிலையம் தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் காணப்படுகிறதா என்பதையும்;

(iii) இன்றேல், அதனை புனர்நிர்மாணம் செய்து மீள பயன்படுத்த முடியுமா என்பதையும்;

(iv) அதன் நிருவாக நடவடிக்கைகளை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவர மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

290/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைவாக, "கோவிட் -19" பெருந்தொற்றினால் இறந்தவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு "மஜ்மா நகர்" பிரதேசத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டதுடன், அதற்காக முப்படையினரின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நல்லடக்கப் பணிகளுக்காக சேவை இணைப்புச் செய்யப்பட்டிருந்த ஒவ்வொரு படைப்பிரிவினதும் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அவ்வலுவலர்களுக்கு அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நல்லடக்கப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட முப்படையினரின் வாகனங்கள் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அவ்வொவ்வொரு வாகனத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் செலவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி நல்லடக்கப் பணிகளுக்காக இறந்தவர்களின் உறவினர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டதா என்பதையும்;

(vii) ஆமெனில், அவ்வாறு அறவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் மற்றும் 6 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24(2) இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2025, பெப்ரவரி 17 ஆம் திகதி, திங்கட்கிழமை மு.ப. 9.45 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா.1/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா.11/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயல்முறைக்கு முறையான பெறுகை வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராமிய மக்களுக்கு மிகவும் நெருக்கமான இயக்கமாகிய கூட்டுறவு இயக்கமானது இன்றளவில் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள காரணத்தினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயல்முறைக்கு அரசாங்கம் முறையான பெறுகை வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா.13/2024

கௌரவ ரோஹண பண்டார,— அரசாங்கம் வசம் அரிசி கையிருப்பினை பேணிச் செல்வதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தற்போது இலங்கையின் அரிசி சந்தை தனியார் துறையைச் சார்ந்த சில வர்த்தகர்களின் பிடியில் சிக்கியிருப்பதால் சந்தையில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் வசம் அரிசி கையிருப்பினை பேணிச் செல்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 15/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழிலாளர் நலன்புரி அலுவலர்களை நியமனஞ் செய்வதற்கு பொருத்தமான முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொருளாதாரத்திற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கி வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பினை வகிக்கும் தொழிலாளர் நலன்புரி அலுவலர்களை நியமனஞ் செய்யும் போது, பொருத்தமான முறையியல்கள் இதுவரை பின்பற்றப்படாததன் காரணமாக பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளமையால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா.24/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டத்தை நீக்குதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்கு இலங்கை வாக்காளர்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள் என்பது வெளிப்படையாக இருப்பதன் காரணமாக உடனடியாகச் செயலூக்கம் பெறும் வகையில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திட்டம் நீக்கப்பட வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

6.

பா.28/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதைத் தவிர்த்து தகனம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்த நிலையில் மேற்படி சடலங்களை நல்லடக்கம் செய்வதன் மூலம் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாயம் காணப்படுவதாக 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி சடலங்கள் உறவினர்களின் உடன்பாடின்றித் தகனம் செய்யப்பட்டதனாலும், பின்னர், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் செயற்பட்டமையானது சரியானதல்ல எனத் தெரிவித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியதனாலும், இந்தத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களைப் பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் இழக்கச் செய்யப்பட்டதனாலும், இது தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகளும் அழுத்தங்களும் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக மட்டக்களப்பு ஓட்டமாவடி, மஜ்மா நகர் எனும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதனால் உயிரிழந்தவர்கள் தொடர்பாக நிறைவேற்ற வேண்டியிருந்த சமயச் சடங்குகள் மற்றும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான உரிமையை உறவினர்கள் இழந்ததனாலும், உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினருக்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டியதன் தேவைப்பாடு மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத் தரப்பினர் இழைத்துள்ள மேற்படி பாரதூரமான தவறுகளை விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா.2/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா. 9/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல்,— இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகள் அனுபவிக்கின்ற சிறப்புரிமைகள் தொடர்பில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் இந்நாட்டின் சமூகத்திலும் உரையாடல் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பொது மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமைகளை பொருத்தமான வகையில் குறைத்தல், அகற்றுதல் அல்லது அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல உறுப்பினர்களிடமிருந்தும் நியாயமான பதிலை பாராளுமன்றத்தில் விவாதித்துப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா.12/2024

கௌரவ ரோஹண பண்டார,— அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது அரச துறையின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களை இறக்குமதி செய்கின்ற செயல்முறையானது ஒரு சிலரின் கைகளில் உள்ள நிலையில் மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்ற காரணத்தினால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக அரச துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா.14/2024

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பை உரிய முறையில் மேற்பார்வை செய்வதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— மக்களுக்கு மிக நெருக்கமான பல கிராமிய கூட்டுறவு வங்கிகள் கடந்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தமையின் அடிப்படையில் அதன் வைப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதால், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக அவ்வங்கிகளை அரசாங்கம் உரிய முறையில் மேற்பார்வை செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா.19/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்ற பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் நிகழும் பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பான விடயங்கள் கணக்காய்வறிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தப்படுவதால், அரச நிறுவனங்களில் அவ்வாறான ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதைத் தடுக்கும் பொருட்டு அவ்வறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

22.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 23/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரித்தல்,— இலங்கையின் தேசிய உற்பத்தியில் கால்நடை வளங்கள் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 25/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடு ஒன்றை வழங்குதல்,— இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் வாழ்வதற்கான வீடு ஒன்றிற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும் என்ற காரணத்தால் பிரதான குடியிருப்பாளரின் உடற் பாதுகாப்பு, பௌதீகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக வீடு ஒன்றை வாங்குவதற்கு, கட்டுவதற்கு அல்லது வாடகைக்குப் பெறுவதற்கு அவரை வலுவூட்டுவதன் மூலம் அவருக்கு வசதிசெய்து கொடுத்தல் அவசியமாகும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

27.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

28.

பா. 27/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒவ்வொரு இளைஞரையும் போதுமான வருமானத்தை ஈட்டும் தொழிலைக் கொண்டிருக்கும் ஆளாக அல்லது சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுதல்,— 18 வயதை அடைந்த ஒவ்வொரு இளைஞருக்கும் போதிய வருமானமீட்டும் தொழிலைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்க வேண்டும் அல்லது தொழில்புரியாது இருப்பின், சுய தொழில்புரியும் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான நிதியுதவி வழங்கப்படுதல் வேண்டும் என இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

*29.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.